செ.வெ.எண்:25 நாள்:30.11.2021

**<u>மோட்டார் வாகன விபத்துகளில் பாதிக்கப்பட்ட நபர்களை மீட்டு உரிய நேரத்தில் மருத்துவமனைகளில் சேர்ப்பதன் மூலம் உயிரை காப்பாற்றிய நபருக்கு நற்கருணை வீரன் (Good Samaritan) விருது சான்றிதழுடன் ரூ.5000/-ம் ரொக்க பரிசு வழங்கப்படவுள்ளது – மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.இரா.லலிதா,இ.ஆ.ப., அவர்கள்</u>**

வாகன விபத்துகளில் பாதிக்கப்பட்ட நபர்களை உரிய நேரத்தில் (Golden Hour) மீட்டு மருத்துவமனைகளில் சேர்த்து உரிய சிகிச்சை அளிப்பதன் மூலம் உயிரை காப்பாற்றிய நபருக்கு விருது வழங்குவது தொடர்பாக மத்திய வாகன போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சகம் 15.10.2021 முதல் புதிய திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது. பேற்படி திட்டத்தில் மோட்டார் வாகன விபத்துகளில் பாதிக்கப்பட்ட நபர்களை மீட்டு உரிய நேரத்தில் மருத்துவமனைகளில் சேர்ப்பதன் மூலம் உயிரை காப்பாற்றிய நபருக்கு நற்கருணை வீரன் (Good Samaritan) விருது சான்றிதழுடன் ரூ.5000/-ம் ரொக்க பரிசாக வழங்கப்படவுள்ளது. இவ்விருதுக்கு அரசு மருத்துவமனைகள் மற்றும் காவல் நிலையங்கள் மூலமாக பரிந்துரை செய்யப்படும் நபர்களுக்கு மாவட்ட கண்காணிப்புக்குழு மூலமாக மாநில கண்காணிப்புக் குழுவுக்கு பரிந்துரை செய்யப்பட்டு, மாநில போக்குவரத்து ஆணையர்/சாலை பாதுகாப்பு ஆணையரால் விபத்தில் பாதிக்கப்பட்டவரை மீட்டு மருத்துவமனையில் சேர்க்கும் நற்கருணை வீரரின் வங்கி கணக்கிற்கு ரூ.5000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) நேரடியாக செலுத்தப்படும்.

மேலும் மாநில கண்காணிப்புக் குழுவானது ஆண்டுக்கு ஒருமுறை மூன்று தகுதியான நபர்களை தேர்வு செய்து தேசிய அளவிலான விருதிற்கு பரிந்துரைக்கும். மத்திய போக்குவரத்து ஆணையம் மாநிலங்களிலிருந்து வரப்பெறும் முன்மொழிவுகளில் 10 நபர்களை தேர்வு செய்து தலா ரூ.1,00,000/- (ஒரு லட்சம் ரூபாய்) ரொக்கத்துடன் சான்றிதழ் மற்றும் கோப்பையுடன் விருது வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே சாலை விபத்துகளில் பாதிக்கப்பட்டு உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளவர்களை மீட்டு மருத்துவமனைகளில் சேர்த்து அரசு வழங்கும் விருதுடன் கூடிய ரொக்க பரிசு ரூ.5000/-த்தினை பெற்றுககொள்ளலாம் என இதன் மூலம் பொதுமக்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.இரா.லலிதா,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கிறார்.